பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 3-50

சுடர் 5 பிரமோதூத ஹூ புரட்டாதி மீ 24 உ புதன்கிழமை (10-10-1990) ஹிஜ்ரி 1410 ற. அவ்வல் 20 கதிர் 217

### மக்கள் கூடியிருந்த நண்பகல் வேளை....

# சந்தை மீது ஹெலித் தாக்கு!

# சாவகச்சேரியில் 9 பேர் பலி!!

## சம்பவத்தில் 20 பேர் படுகாயம்

— உதயன் தென்மராட்சி செய்தியாளர்:- வி. கிருஷ்ணன் —

தென்மராட்சி, அக். 10

சாவகச்சேரி சந்தையில் நேற்று நண்பகல் கூடி நின்ற பொது மக்கள் மீது திடீரென வந்த ஹெலிக்கொப்டர் ஒன்று ரொக்கட் தாக்குதலை நடத்தியது. இதனால் சந்தைக்கு வந்திருந்த அப்பாவிப் பொதுமக்கள் ஒன்பது பேர் உயிரிழந்தனர்- 20 பேர் படுகாயமுற்றனர்.

நேற்று செவ்வாய்க்கிழமை சந்தை தினம் ஆகையால், மக்கள் நெருக்கமாய்க் கூடி நின்ற வேளையில் - நண்பகல் 12.30 மணியளவில்- இந்தத் திடீர் தாக்குதல் நடத்தப்பட்டது.

இந்தத் தாக்குதலினால் சந்தைக்கு வந்திருந்த இரண்டு பெண்கள், இரண்டு சிறுவர்கள், வியாபாரிகள் உட்பட ஒன்பது அப்பாவிப் பொதுமக்கள் பலியானார்கள்; இருபது பேர் படுகாயமடைந்தனர்.

படுகாயமுற்றோர் உடனடியாக மானிப்பாயில் இயங்கும் யாழ் போதனா ஆஸ்பத்திரி மந்திகை ஆஸ்பத்திரி, சாவகச்சேரி மாவட்ட ஆஸ்பத்திரி ஆகியவற்றுக்கு எடுத்துச் செல்லப் பட்டனர்.

ஹெலிக்கொப்டரிலிருந்து ரொக்கட் தாக்குதலை அடுத்து பல தடவைகள் கலிபர் தாக்குதல்களும் மேற்கொள்ளப்பட்டன.

இந்தத் தாக்குதலில் உயிரி

[4 ஆம் பக்கம் பார்க்க]

## சுன்னாகத்தில் பலாலி ஷெல்கள்!

மல்லாகம், அக். 10

பலாலி, முகாமில் இருந்து ஏவப்பட்ட ஷெல்கள் நேற்று சுன்னாகத்தில் சில பகுதிகளில் விழுந்து வெடித்தன.

நேற்று பிற்பகல் 2 மணியளவில் சுன்னாகம் தெற்குப் பகுதியில் விழுந்த ஷெல்லில்

[4 ஆம் பக்கம் பார்க்க]

### செஞ்சிலுவை சங்க மேற்பார்வையில்

## யாழ். ஆஸ்பத்திரியின் திருத்த வேலைகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம், அக். 10

இராணுவ நடவடிக்கையால் சேதமடைந்த யாழ். போதனா வைத்தியசாலையின் திருத்த வேலைகள் நேற்று செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் மேற்பார்வையில் ஆரம்பமாகின.

நூற்றுக்கும் மேற்பட்ட ஊழியர்கள் நேற்று திருத்த வேலைகளில் ஈடுபட்டிருந்தனர்.

கூரைகள் பெருமளவு சேதமடைந்துள்ளதால் அங்குள்ள உபகரணங்கள், கருவிகள் மற்றும் பொருள்கள் வெயிலினாலும், காற்றினாலும், மழையினாலும் பாதிப்படைகின்றன என தெரிவிக்கப்பட்டது. (ஓ-3)

## திருமலையில் தாக்குதல்; இரு ஊர்காவலர் பலி

யாழ்ப்பாணம், அக். 10

திருகோணமலை மாவட்டத்தில் நேற்றுக்காலை 8 மணியளவில் ஹொரவப்பொத்தானைக்கும் சாந்திபுரத்துக்கும் இடையில் வைத்து ஊர்காவற் படையினர் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தினர்.

இதில் இரண்டு ஊர்காவலர் உயிரிழந்தனர் என்றும் - 303 ரைபிள் -1 அதற்கான ரவைகள் -20, ஷொட்கன்-1, அதற்கான தோட்டாக்கள் - 2 ஆகியவை அவர்களிடமிருந்து மீட்கப்பட்டன என்றும் விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன. (உ)

## குடாநாட்டில் பரவலாக நேற்று ஹெலிகள் மூர்க்கம்!

குடாநாட்டின் பல பகுதிகளிலும் நேற்று ஹெலிகள் பரவலாக மூர்க்கமான தாக்குதல்களை நடத்தின.

கடந்த 13 நாட்களுக்குப் பின்னர் யாழ் நகரை அண்டிய பகுதிகளிலும் ஹெலிகள் கண்டபடி தாக்குதல்களை மேற்கொண்டன.

திருநெல்வேலி, கொக்குவில், கோண்டாவில், கல்வியங்காடு, இருபாலை மற்றும் பல இடங்களிலும் தாக்குதல்கள் இடம்பெற்றன.

அளவெட்டி, விளான், கீரிமலை, மயிலிட்டி ஆகியபகுதிகளிலும் ஹெலி வேட்டுக்களைத் தீர்த்தன.

கடந்த சில நாட்களாக சற்று அமைதியடைந்திருந்த மக்கள் மீண்டும் தாக்குதல்கள் ஆரம்பிக்கப் போகின்றனவோ என அச்சமடைந்தனர். (ஓ-143-69)

## வலி. வடக்குப் பகுதியில் நேற்று மக்கள் பதற்றம்

காங்கேசன்துறை, அக்: 10

வலிகாமம் வடக்குப் பகுதியிலும் நேற்று ஹெலி கடும் தாக்குதல்களை நடத்தியது.

நேற்றுக் காலையில் இருந்து தெல்லிப்பழை, காங்கேசன்துறை, மல்லாகம் பகுதியில் ஹெலி பலமுறை வட்டமிட்டு கலிபர் தாக்குதலை மேற்கொண்டது.

சில பகுதிகளை நோக்கி ஷெல், ரொக்கட் தாக்குதல்களும் நடத்தப்பட்டன.

இதனால் வலிகாமம் வடக்குப் பகுதி மக்கள் நேற்று பெரும் பதற்றமடைந்தனர்.

இதே வேளை—

பண்டத்தரிப்பு பகுதியிலும் ஹெலி வேட்டுக்களைத் தீர்த்தது. [ஓ-68]

### வவுனியாவுக்கு அப்பால் செல்வோருக்கு

## பிரதேசப் பொறுப்பாளர்களே பயணிகள் "பாஸ்" வழங்குவர்!

யாழ்ப்பாணம், அக். 10

வவுனியா மாவட்டத்துக்கு அப்பால் செல்லும் பயணிகள் அனைவரும் இன்று முதல் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் அனுமதிப்பத்திரம் (''பாஸ்'') பெற்றே செல்லவேண்டும்.

இந்தப் பத்திரங்களை முன்னணியின் பிரதேசப் பொறுப்பாளர்கள் வழங்குவார்கள்.

முன்னணியின் உயர் மட்டப் பிரமுகர் ஒருவர் இத்தகவலை நேற்று வெளியிட்டார். வவுனியாவுக்கு அப்பால் செல்வதற்கான அனுமதிப் பத்திரம் பெறுவது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

* வவுனியாவுக்கு அப்பால் கல்வி பயிலும் மாணவர்கள், அரச ஊழியர்கள், தனியார் நிறுவன ஊழியர்கள் பிரயாணம் செய்யும் காரணத்தை தெரிவித்து சிற்றா

[4 ஆம் பக்கம் பார்க்க]

## ஓய்வூதியக் கொடுப்பனவுகள் அரைமணி நேரம் மட்டும்

யாழ்ப்பாணம், அக் 10

இலங்கைவங்கி ஆஸ்பத்திரி வீதிக்கிளையூடாக ஓய்வூதியம் பெறுபவர்களுக்கான ஆகஸ்ட் மாத ஓய்வூதியக் கொடுப்பனவுகள் இன்று புதன்கிழமை முதல் வழங்கப்பட உள்ளன.

ஓய்வூதியர்கள் தமது ஓய்வூதிய வவுச்சரை வங்கிக் கருமபீடத்தில் நேரடியாக சமர்ப்பித்து பணத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

முதற் கட்டமாக இன்று புதன்கிழமை காலை 9.00 மணி தொடக்கம் 9 30 மணி வரை ஓய்வூதியம் வழங்கப்படும். அடுத்தகட்டக் கொடுப்பனவு பற்றி மீண்டும் அறிவிக்கப்படும் (இ-6)

## 12 ராணுவத்தினரின் சடலங்கள் செஞ். சங்கத்திடம் ஒப்படைப்பு

### கப்பல் மூலம் எடுத்துச் செல்லப்படுகின்றன

யாழ்ப்பாணம், அக். 10

யாழ். கோட்டை மோதல்களின்போது மரணமான பன்னிரண்டு இராணுவத்தினரின் சடலங்கள், விடுதலைப் புலிகளால் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் பிரதிநிதியிடம் நேற்று மாலை ஒப்படைக்கப்பட்டன.

நேற்று மாலை 6-10 மணியளவில் புலிக்கொடி பறக்கும் வாகனங்களில், இராணுவத்தினரின் சடலங்கள் [illegible] பட்ட பேழைகளுடன் விடுதலைப் புலிகள் பிரமுகர்களும், உள்ளூர் பத்திரிகையாளர்களும் பருத்தித்துறையை அடைந்தனர்.

அங்கு செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு பிரதிநிதி [illegible]

[4 ஆம் பக்கம் பார்க்க]

## வல்வெட்டித்துறையில் ஹெலி தாக்கி மூவர் காயம்

வல்வெட்டித்துறை, அக்,10

வல்வெட்டித்துறையில் இடம்பெற்ற ஹெலிக்கொப்டர் தாக்குதலில் மினிபஸ் சாரதி ஒருவரும் பயணிகள் இருவரும் காயமடைந்தனர்.

கடந்த திங்கட்கிழமை மாலை இச்சம்பவம் நடந்தது.

காயம் அடைந்தவர்கள் கே: ஸ்ரீஸ்கந்தராசா (வயது

[4 ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ★ சின்னஞ்சிறு விளம்பரம் ★

### உடன் தேவை

போறனை மேசை வேலை நன்கு தெரிந்த ஆட்கள் உடன் வரவும். சம்பளம் நேரில் பேசிக்கொள்ளப்படும் சேதி பேக்கறி பொற்பதி வீதி, கொக்குவில் கிழக்கு. [14403]

### மணமக்கள் தேவையா

எம்மிடம் எல்லாச் சாதி சமயத்திலும் எல்லாக்கோவைகளிலும் மணமக்கள் இருக்கிறார்கள் மங்கள ஏஜென்சி கொய்யாத்தோட்டம் யாழ்ப்பாணம். [14407]

### TYPEWRITERS

தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும், விற்கவும் சிறந்த முறையில் திருத்தவும் மற்றும் தமிழ், ஆங்கிலம் ரைப்பிங் வேலைக்கும் Fudo, Enterprises, பிரதான வீதி, மானிப்பாய், Bank - Siva Studio அருகாமையில் (சி 5219)

### றோனியோ

மீண்டும் றோனியோ தமிழ் ஆங்கில தட்டச்சு சகல விதமான அச்சுவேலைகளும் சிறந்த முறையில் செய்து கொள்ள நாடுங்கள்: தயா அச்சகம் இல 138. நாவலர் றோட், யாழ்ப்பாணம். நேரம்: காலை 9 00 - 12.00 மணி வரை. (14372)

### நிலவே நீ மயங்காதே

மீரா வெளியீடு இந்திரா பிரியதர்ஷினி எழுதியது தவிக்கும் பெண்மனம், தடுமாறும் பெண்மனம், செய்வதறியாது திகைக்கும் பெண் மனங்களை இந்நாவலில் சந்தியுங்கள். துர்க்கா ஸ்ரேசனேர்ஸ் சுன்னாகம், திருக்கணிதம் சாவகச்சேரி ஸ்ரீகாந் புத்தகசாலை, நல்லூர் யாழ்ப்பாணம். (14387)

### கோழித்தீன்

கோழித்தீன் வகைகள் கலந்து கொடுக்கப்படும். கோழித்தீன் விற்கப்படும். மூலதாரப் பொருட்கள் அரைத்துக் கொடுக்கப்படும். மீன்பிடி வலைக்கு பயன்படுத்தப்படும் கண்டல் பட்டை மொத்தமாகவும், சில்லறையாகவும், பெற்றுக்கொள்ளலாம். சிவா மில்ஸ் அன் இண்டஸ்றீஸ், 46/1, பிறவுண் வீதி, 4 ஆம் ஒழுங்கை யாழ்ப்பாணம். (14402)

### அறிவித்தல்

எங்கள் ஸ்தாபனம் மீண்டும் பழைய இடத்தில் இயங்கி வருகிறது. எ பதை மிக மகிழ்ச்சியுடன் வாடிக்கையாளருக்கு அறியத்தருகின்றோம் ஸ்ரீலங்கா அச்சகம், 234 A, K. K. S. வீதி, யாழ்ப்பாணம். [13886]

### தவறிவிட்டது

தம்பிஐயா சின்னராசா என்ற அடையாள அட்டை இல. 590802425 V தவறிவிட்டது. கிடைத்தவர்கள் தயவு செய்து உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (13887)

### மனோகரன் &வெற்றிவேல்

தங்களது சேதமடைந்த கட்டடங்களை மதிப்பீடு செய்து தருவதற்கும் திருத்த வேலைகளை நியாயமான கட்டணத்தில் செய்வதற்கும் எம்மோடு தொடர்பு கொள்ளுங்கள்; மனோகரன் & வெற்றிவேல், 49, அம்பலவாணர் வீதி. அத்தியடி யாழ்ப்பாணம். (14406)

### பேபி நீட்ஸ்

59 நவீன சந்தையில் இயங்கி வந்த எமது ஸ்தாபனம் தற்போது கே.கே. எஸ் வீதி, தாவடி (சந்திக்கு அருகாமையில்) தற்காலிகமாக இயங்கி வருகின்றது. என்பதனை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத் தருகின்றோம். [14405]

### இடமாற்றம்

சுன்னாகம் ஸ்ரேசன் வீதியில் அமைந்திருந்த முறிவு, நோவு வைத்திய நிலையம் தற்போது சிறுப்பிட்டி பலநோக்குக் கூட்டுறவுச் சங்க ஒழுங்கையில், இராமநாதன் இல்லத்தில் அமைந்துள்ளது. காலை 9 00மணி தொடக்கம் மாலை 6 மணிவரை வைத்தியம் நடைபெறுகின்றதென்பதையும் வாடிக்கையாளருக்கு அறியத்தருகின்றேன். பி. கிருபைராசா வசாவிளான். [14391]

### ரதி வோச் வேக்ஸ்

(Rathy Watch Works)

எமது ஸ்தாபனத்தில் திருத்த வேலைக்காக தந்த மணிக்கூடு வகைகளை இல, 12. பொன்னையா லேன், ஆறுகால்மடம் ஆனைக்கோட்டையில் பெற்றுக் கொள்ளவும் திருத்துதல் வேலைகளும் நடைபெறுகின்றது. என்பதை வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றேம். (யாழ் நகரிலமணிக்கூடுகள்திருத்துவதில் பிரசித்தி பெற்றவர்கள்) (14401)

## வாழ்க்கை செலவு

கொழும்பு, அக் 10

செப்டம்பர் மாதத்துக்கான வாழ்க்கைச் செலவுப்புள்ளி 1026.5 என குடிசன மதிப்புப் புள்ளி விவரப்பகுதி அறிவித்துள்ளது. (இ - எ)

## 41ஆம் நாள் நினைவஞ்சலி



டாக்டர்

### எஸ். கந்தையா

தோற்றம்:
06 — 04 — 1917

மறைவு:
01 — 09 — 1990

எங்கள் குடும்பத்தின் ஒளி விளக்காய் இருந்து எம்மை எல்லாம் நல்வழி காட்டிய தெய்வமே இன்று உங்களைப் பிரிந்து 41 ஆம் நாள் ஆகியும் உங்கள் நினைவுகள் எங்களை விட்டு அகலவில்லையே.

அத்துடன் அந்நாளின் இறுதிக்கிரியைகளில் நேரில் கலந்து கொண்டவர்களுக்கும், 31ஆம் நாள் சபண்டியில் பங்கு பற்றியவர்களுக்கும் எமது இதய பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மனைவி,
மகன்,
மருமகன்,
பேரன்.

9, செட்டித் தெரு,
நல்லூர்.
[14396]

## 49ஆம் நாள் நினைவஞ்சலி

அமரர்

### இராமலிங்கம் அருணாசலம்

(22-08-90) அன்று ஆனைக்கோட்டையில் இடம் பெற்ற ஹெலித் தாக்குதலில் அகால மரணமடைந்தார்)

| மண்ணில்: | விண்ணில்: |
|---|---|
| 22 — 10 — 1918 | 22 — 08 — 1990 |

அன்பின் உருவுருவாய், எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய் வாழ்வின் வழிகாட்டியாய் வாழ்ந்து எமை விட்டு நீங்கி மீளாத்துயில் கொண்ட அன்புத் தெய்வமே! உங்கள் நினைவுகள் என்றும் எம் நெஞ்சை விட்டு அகல்வதில்லை.

என்றும் உங்கள் ஆத்மா சாந்தி பெறப் பிரார்த்திக்கும்:

மனைவி, மக்கள்.

கூளாவடி, ஆனைக்கோட்டை. [14404]

## 45ஆம் நாள் நினைவஞ்சலி



செல்வன்

### பூபாலசிங்கம் சசிகரன் (சசி)

(ஜக்ஸன்)

| தாயின் மடியில்: | காலனின் பிடியில்: |
|---|---|
| 09 - 01 - 1971 | 26 - 08 - 1990 |

இலங்கை இராணுவத்தின் இலக்கினைத் தகர்த்தெறிந்து ஈழ மண் மீட்க வந்த வீர வேங்கையாய் மண்டைதீவில் தீரமுடன் விரட்டிப் போராடும் வேளை நாற்பத்தொன்பது வேங்கையில் நீயும் ஒருவனாய் ஆர அணைத்தாய் ஓர் குண்டை ஈழ விடுதலைக்காய்

உன்பிரிவால் வாடும்:
அக்கா, அண்ணா, அன்ரி,
சித்தி, உற்றார். உறவினர், நண்பர்கள்.

புகையிரத நிலைய வீதி, பளை. [14408]

## எமது நிறுவன மாணவர் கவனத்திற்கு

G. A Q, B. A. பரீட்சை விண்ணப்ப படிவங்களை எமது நிறுவனத்தில் 10-10-90 காலை 9 — 11 இடையில் பெற்றுக் கொள்ளவும்.

## ★ புதிய உயர் கல்லூரி ★

ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம்.
[சி-5243]

## விற்பனைக்குண்டு

எங்கள் ஸ்தாபனத்தில் கீழ்க் காணப்படும் தரமான உயரின நாற்றுக் கன்றுகள் நியாய விலையில் விற்பனைக்குள்ளன.

| | | | |
|---|---|---|---|
| 1 | தேசிக் | கன்றுகள் | (பதியம் வைத்தமை) |
| 2. | ,, | ,, | (ஒட்டியவை) |
| 3. | தோடம் | ,, | ( ,, ) |
| 4. | மாங் | ,, | (ஒட்டியமை) |
| 5 | பலாக் | ,, | |
| 6. | தென்னங் | ,, | |
| 7. | மாதுளம் | ,, | |
| 8. | கொய்யாக் | ,, | |
| 9 | அகத்திக் | ,, | |
| 10 | நெல்லிக் | ,, | |

இன்னும் பல உயர்ரக நாற்றுக் கன்றுகளை சில்லறையாகவும், மொத்தமாகவும் பெற்றுக்கொள்ளலாம். நாட வேண்டிய முகவரி.

## “சைவ வித்தியா விருத்திச் சங்கம்”

(The Hindu Board of Education)

கல்லூசாலை வீதி,
திருநெல்வேலி.
[சி-5245]

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



பிறப்பு:
01 - 01 - 1917

இறப்பு:
12 - 09 - 1990

### திரு. சிவசாமி பொன்னுத்துரை “மான்குட்டி”

அவர்கள்

கடந்த ஆவணித் திங்கள் 27 ஆம் நாள் 12-09-90 புதன்கிழமை சிவபதம் நோக்கிய எங்கள் குடும்பத் தலைவர் திரு. சிவசாமி பொன்னுத்துரை 'மான்குட்டி' அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் 11-10-90 வியாழக்கிழமை காலை கீரிமலை தீர்த்தக்கரையிலும், வீட்டுக் கிருத்தியம் 12 - 10 - 90 வெள்ளிக்கிழமை நண்பகல் எமது இல்லத்திலும் நடைபெறும் அத்தருணம் தாங்கள் சமுகம் தந்து பிரார்த்தனைகளில் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

மான்குட்டி அவர்களின் மரணத்தின் போது அவருடைய பிள்ளைகள் ஊரில் இல்லாத சூழ்நிலையில் பிள்ளைகள் போல் பேருதவிகள் செய்த நண்பர்கள், உறவினர்கள் அனைவருக்கும் எங்கள் இதயங்கலந்த நன்றியை இத்தால் தெரிவித்துப் பணிந்து வணங்குகின்றோம்.

அம்பிகை பவனம், பலாலி றோட், திருநெல்வேலி தெற்கு.

மனைவி, மக்கள், மருமக்கள், பேரர், மாமியார்.

[14409]

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# உதயன்

## இனக் கொலை முயற்சியா?

சூடாநாட்டில் உள்ள மருந்துச்சாலைகள் பலவற்றிலும் நாட்பிந்திய மருந்து வகைகள் மற்றும் பால்மா வகைகள் விற்பனையாவதாக அடிக்கடி செய்திகள் வெளிவந்தன. சுகாதாரப் பகுதி உத்தியோகத்தர்கள் மேற்கொண்ட பரிசோதனைகள்மூலம் அந்தச்செய்திகள் ஊர்ஜிதமாகியுள்ளன. சுகாதார சேவைகள் பிராந்தியப் பணிப்பாளர் டாக்டர் ந. கனகசபை வெளியிட்ட அறிக்கை மருந்து விற்போர் - மருந்துச்சாலை உரிமையாளர்கள் - செய்த மோசடிகளை உத்தியோக பூர்வமாக அம்பலப்படுத்துகிறது.

நோயாளி அனுபவிக்கும் உபாதைகளை நீக்கி ஆரோக்கியத்தை உண்டாக்கும் பொருட்டே மருந்துகள் உட்கொள்ளப்படுகின்றன. காலம் பிந்திய மருந்துவகைகளைப் பாவிப்பதால் எதிர்பார்க்கும் ஆரோக்கியத்தை அடைய முடியாதது மட்டுமல்ல; உடலில் பலவித பயங்கரமான - உயிராபத்தைத் தரக்கூடிய - பாதிப்புக்களும் உண்டாகும். இது மருந்துச்சாலை உரிமையாளர்களுக்குத் தெரியாத ஒன்றல்ல.

நாட்பிந்திய மருந்துவகைகளை விற்பது சமூகக் கொலைக்கு ஒப்பாகும். சட்டமும், ஒழுங்கும் இப்பகுதியில் இல்லை என்பதால் சமூகவிரோதிகள் பலரும் சட்டத்தைக் கையில் எடுத்துக் கொண்டு தமது மெத்தனத்தைக்காட்ட முயல்கிறார்கள். அந்த வகையினரில் மருந்துச்சாலை நடத்துவோரும் சேர்ந்து கொண்டது பெரும் வேதனைக்குரியது. அவர்கள் கண்டிக்கப்படவேண்டியவர்கள்; தண்டிக்கப்படவேண்டியவர்கள்.

சாதாரண உணவுப் பொருள்களை அதிக விலைக்கு விற்கும் வர்த்தகர்கள், பதுக்கல் செய்வோர், கள்ளச் சந்தைக்காரர்கள் ஆகியோர் புரியும் சமூகவிரோதத்தை விடப் பல மடங்கு பாரதூரமான குற்றச்செயலாக நாட்பட்ட மருந்துகள் விற்பனை கணிக்கப்படவேண்டும். மக்களின் உயிருடன் விளையாடும் அந்தமோசடி எக்காரணம் கொண்டும் சகிக்கமுடியாதது; மன்னிக்க முடியாதது.

எனவே நாட்பட்ட மருந்து வகைகளை விற்று மக்களுக்கு ஆபத்து விளைவிக்கும் மருந்துச்சாலைக்காரர்களின் உடைமைகளை பறிமுதல்செய்வது மட்டும் உகந்த தண்டனையாகாது. சுகாதாரத் திணைக்களத்தினர் உரிய விசாரணைகளை நடத்தி மருந்துச்சாலைக்காரரின் அனுமதிப் பத்திரங்களையும் ரத்து செய்துவிடவேண்டும்.

நாட்பட்ட மருந்தை விற்பது, மக்களுக்கு நஞ்சூட்டி பெரும் எண்ணிக்கையில் அவர்களை மரணம் அடையச் செய்யும் — கொலை செய்யும் [Mass Murders] மறைமுக முயற்சியாகக் கருதப்படவேண்டியது.

ஆகையால் நாட்பிந்திய மருந்துகளை விற்ற சகலரும், சமூக விரோதக் குற்றம் மட்டுமன்றி கொலைக் குற்றமும், அதற்குமேற்பட்ட இன ஒழிப்பு முயற்சியில் ஈடுபட்டு சதிக் குற்றமும் புரிந்தவர்களாகக் கருதப்படவேண்டியவர்கள். இன ஒழிப்பில் ஈடுபட்டிருக்கும் ஸ்ரீலங்காப் படைகளின் பக்கத்தே வைத்து நோக்கப் படவேண்டியவர்கள்.

# நிவாரணக்கடன்-கொடுப்பனவு

# அனைத்தும் இடைநிறுத்தம்

யாழ்ப்பாணம், அக். 10

புனர்வாழ்வு, புனர்நிர்மாண அமைச்சின் ஒன்றிணைக்கப்பட்ட நிவாரணத் திட்டத்தின்கீழ் யாழ் மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வந்த சகல புனர்வாழ்வு, புனரமைப்பு வேலைகளும் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

கொழும்பிலிருந்து புனர்வாழ்வு அமைச்சால் கடந்த ஜூலை மாதமளவில் அனுப்பப்பட்டுள்ள உத்தரவுக்கிணங்கவே இவை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன என்று புனர்வாழ்வு - புனரமைப்புத் திட்ட அத்தியட்சகர் திரு.வ. நடேசபிள்ளை தெரிவித்தார்.

அந்த உத்தரவின்படி இலவச உலர் உணவு விநியோகம் மாத்திரமே மேற்கொள்ளப்படவேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

புனர்வாழ்வு புனரமைப்புத் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டு வந்த நிவாரணக் கொடுப்பனவுகளான மீளக்குடியமர்வுப்படி, வீடமைப்பு கட்டடப் பொருள் நன்கொடை, வீடமைப்புக்கடன்கள் உற்பத்தித்திறன் முயற்சி நன்கொடை, உற்பத்தித் திறன் முயற்சிக்கடன், ஊனமுற்றோர், உயிரிழந்தோருக்கான உதவிகள் முதலான பத்து வகையான கொடுப்பனவுகளும் மறு அறிவித்தல் வரை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

இதனால், கடந்த கால வன்செயல்களின் போது பாதிப்படைந்து இந்தக் கொடுப்பனவுகளைப் பெறத் தவறியவர்கள் ஏமாற்றம் அடைந்துள்ளனர்.

(இ - 6)

### செப்டம்பர் சம்பளம் இல்லை

யாழ் செயலக ஊழியர்களின் கடந்த செப்டம்பர் மாதச் சம்பளம் இதுவரை வழங்கப்படவில்லை.

(இ - 100)

## நிலைமை சீரடைந்த பின்னர் போட்டிப் பரீட்சைகள்

கொழும்பு, அக். 10

அரச திணைக்களங்கள், கூட்டுஸ்தாபனங்கள், வங்கிகள், பொதுக் கம்பனிகள் போன்றவற்றுக்கு ஆட்களை சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சைகள் தமிழ்ப் பிரதேசங்களில் நிலைமை சீரான பின்னர் நடைபெறும் என்று அரசாங்க வட்டாரங்கள் அறிவித்துள்ளன.

வெற்றிடங்களை நிரப்பும் பொருட்டு யாழ்ப்பாணம், வவுனியா, கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு, மட்டக்களப்பு, மாவட்டங்களுக்கு என ஒதுக்கப்பட்ட கோட்டாக்கள் எக்காரணம் கொண்டும் வேறு மாவட்டங்களுக்கு வழங்கப்பட மாட்டா என்றும்-

எனவே தமிழ் மாவட்ட விண்ணப்பதாரர் தமக்குத் தொழில் வாய்ப்புக்கான சந்தர்ப்பம் பறிபோய்விடும் என அஞ்சத் தேவையில்லை என்றும் அந்த வட்டாரங்கள் கூறின.

(இ-5)

## குழந்தைகளுக்கான தடுப்பூசி

யாழ்ப்பாணம், அக் 10

மானிப்பாய் - யாழ் போதனா வைத்தியசாலைப் பிரிவில் நீண்ட காலத்துக்குப் பின் குழந்தைகளுக்கான தடுப்பூசி ஏற்றும் வேலைகள் இடம்பெறுகின்றன.

ஒன்றரை வயது வரை பாவிக்கப்படும் தடுப்பூசிகளே தற்போது ஏற்றப்படுகின்றன என்றும் ஐந்து வயதில் ஏற்றப்படும் தடுப்பூசி மருந்து விரைவில் வந்துசேரும் என்றும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

(இ-15)

# செய்திச் சாரம்

### உத்தியோகத்தர் கூட்டம்

யாழ்ப்பாணம். அக் 10

யாழ். மாவட்டத்தில் தங்கியுள்ள வடபிரதேசிய நெற் சந்தைப்படுத்தும் சபை உத்தியோகத்தர்கள் கடமைக்கு திரும்புவது குறித்து ஆராயும் பொருட்டு இன்று 10 ஆம் திகதி கூட்டம் ஒன்று நடைபெறவுள்ளது

நல்லூரில் உள்ள சபையின் நிர்வாக உத்தியோகத்தர் அலுவலகத்தில் காலை 9 30 மணிக்கு பிரதேசிய முகாமையாளர் தலைமையில் கூட்டம் நடைபெறும் [illegible]

### டிரான்ஸ்போமர் ஒயில் திருட்டு

நவாலி, அக். 10

ஆனைக்கோட்டை மூத்த நயினார் ஆலயத்துக்கு முன்பாக அமைந்துள்ள டிரான்ஸ்போமரிலிருந்து ஒயில் களவாடப் பட்டுள்ளது

சில தினங்களுக்கு முன் ஆனைக்கோட்டை உப அலுவலகத்தின் அத்தியட்சரும் ஊழியர்களும் இச் சாதனத்தை பரிசீலனை செய்த சமயம் ஒயில் திருடப்பட்டது கண்டு பிடிக்கப் பட்டது.

இதனால் மின்சாரம் வந்தாலும் நவாலி ஆனைக்கோட்டைப் பகுதிகளுக்கு வழங்க முடியாத நிலை இருந்து வருகிறது

(இ - 100)

### சண்டிலிப்பாய் உ. அ. அதிபர்

நவாலி அக் 10

சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபராக திரு ஏ ஜி. சேகரம் நியமனம் பெற்றுள்ளார் முன்பு உதவி அரசாங்க அதிபராக பணிபுரிந்த திரு கதிவசம் ஓய்வு பெற்றுள்ளார்

(இ - 100)

### நடமாடும் சுகாதார நிலையம்

யாழ்ப்பாணம், அக் 9

யாழ் கடற்கரை வீதி திருச்சிலுவை சுகநல சேவா நிலையமும் யாழ் செஞ்சிலுவைச்சங்கமும் இணைந்து நடமாடும் சுகாதார நிலையம் ஒன்றை நடத்திவருகின்றன

இந்த நடமாடும் சுகாதார நிலையம் திங்கள் புதன் கிழமைகளில் யாழ்-செஞ்சிலுவைச்சங்க அலுவலகத்திலும்-

சனி வியாழன் கிழமைகளில் அரியாலை கிழக்கிலும் செயல்படும்:

காலை 9 மணிமுதல் பகல் 12 மணிவரை இந்த நிலையங்கள் செயல்படும் (இ - 3)

# மடு அகதிமுகாம் பராமரிப்பை ஐ.நா. அகதிகள் அமைப்பு ஏற்றது

யாழ்ப்பாணம், அக் 10

மடுவில் அமைந்துள்ள 8 ஆயிரம் அகதிகள்கொண்ட முகாமுக்கு தேவையான உதவிகளை வழங்க அந்த முகாமை பராமரிக்கும் பணியை ஐ. நா. அகதிகள் ஸ்தானிகராலயம்மேற்கொண்டுள்ளது.

பல்வேறு பகுதிகளைவிட்டு இடம்பெயர்ந்து மடுவில் தஞ்சமடைந்துள்ள மக்களுக்கு உதவும்வகையில் இந்தமுகாம் அரசாங்கத்தினால் அண்மையில் பொறுப்பேற்கப்பட்டது

இங்கு தஞ்சமடைந்துள்ள அகதிகளுக்குத் தேவையான உணவு உட்பட சகல வசதிகளையும் ஐ நா அகதிகள் ஸ்தானிகராலயம் மேற்கொண்டுள்ளது.

கொழும்பிலிருந்து வாகன அணிமூலம் இந்த முகாமுக்கு தேவையான பொருள்கள் கொண்டுவரப்படுகின்றன.

(இ-3)

### லயன்ஸ் இலவச வைத்திய சேவை

யாழ்ப்பாணம். அக். 10

அகதி முகாம்களில் தங்கியிருப்போர் நன்மை கருதி இலவச வைத்திய சேவை நிலையம் ஒன்றை எதிர்வரும் 14 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10மணிக்கு சித்தன்கேணியில் உள்ள வட்டுக்கோட்டை லயன்ஸ் கழக தொழிற்பயிற்சிக் கட்டடத்தில் வட்டுக்கோட்டை லயன்ஸ் சழகம் அமைக்கவிருக்கிறது. (இ - 3)

## பொறியியல் பீட திட்டமிடல் வேலைகள் ஆரம்பமாகின

யாழ்ப்பாணம், அக். 10

யாழ் - பல்கலைக்கழக பொறியியல் பீடம் அமைப்பதற்கான திட்டமிடல் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பொறியியல் பீடத்துக்கு பேராசிரியராக நியமிக்கப்பட்டுள்ள மலேசியா பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த திரு. எஸ். நவரத்தினராசா தமது பதவியைப் பொறுப் பேற்றுள்ளார்;

கிளிநொச்சியில் பீடம் அமைப்பதற்கான வேலைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (இ-3)

### இருவர் காயம் வீடுகள் சேதம்

யாழ்ப்பாணம் அக்; 10

சரவணை மேற்கில் இடம்பெற்ற பீப்பாய் குண்டு வீச்சினால் காயம் அடைந்த பி. தனுஜா [வயது 17] கே. வரலஷ்மி[வயது 26]ஆகிய இருவரும் மானிப்பாய் போதனா வைத்தியசாலைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றனர். காயம் அடைந்த மற்றும் ஒருவரான பி யோகாம்பிகை [வயது 38] சிகிச்சையின் பின் ஆஸ்பத்திரியில் இருந்து வெளியேறி உள்ளார்.

மண்டைதீவில் முகாமிட்டிருந்த படையினர் ஊர்காவற்றுறையை நோக்கி வாபஸான சமயம் கடந்த 28 ஆம் திகதி இந்தக் குண்டு வீச்சு இடம்பெற்றது.

இந்தக் குண்டு வீச்சால் இரு வீடுகள் பெரும் சேதம் அடைந்தன. மற்றும் [illegible] சிறுசேதங்களுக்கு உள்ளாகின.

(இ)

### நிவாரண உணவு விநியோகம் தொடர்பாக

# ப.நோ.கூ.ச பிரதிநிதிகளுடன் கலந்தாலோசனை இல்லை

## சீரற்ற நிலைக்கு இதுவே காரணமாம்

யாழ்ப்பாணம், அக். 10

யாழ் - மாவட்டத்தில் தற்சமயம் மேற்கொள்ளப்பட்டு வரும் நிவாரண உணவு விநியோகம் சீரற்ற முறையில் அமைவதற்கு காரணம், விநியோகத்தை நடைமுறைப் படுத்தும் ப. நோ. கூ. சங்கத்தினருடன் கலந்தாலோசிக்கப்படாததே.

பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்களின் அதிகாரி ஒருவர் உதயனுக்கு மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது-

தற்சமயம் நிவாரண உணவு விநியோகம் ப. நோ. கூ. சங்கங்களால் மேற்கொள்ளப் பட்டு வருகின்றது,

செயலக அதிகாரிகளும் மற்றும் நிர்வாகத்துடன் தொடர்புடையவர்களும் மட்டுமே பங்கீட்டு முறைகளைத் தீர்மானிக்கிறார்கள்.

நிவாரணப் பொருள் விநியோகத்தைக் கையாளும் ப, நோ. கூ. சங்கத்தினர் இந்த நிவாரணம் தொடர்பான கூட்டங்களுக்கு அழைக்கப்படுவதில்லை.

அவர்களையும் அழைத்து ஆலோசனை செய்வதன் மூலம் எந்தச் சிக்கலும் இன்றி நிவாரண வேலைகளை மேற்கொள்ளமுடியும்

நடைமுறையில் உள்ள சிக்கல்களை ஒரளவ வது அரச அதிகாரிகள் உணரவேண்டும்- என்று அவர் கூறினார்.

அதேவேளை -

இன்று காலை யாழ் செயலகத்தில். மூன்றாம் கட்ட நிவாரண விநியோகம் தொடர்பான கூட்டம் ஒன்று நடைபெறுகிறது.

இதற்கும் ப. நோ. கூ. சங்கப்பிரதிநிதிகள் அழைக்கப் படவில்லை. (இ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ் பல்கலை. பீடங்கள் நவ. 5 முதல் இயங்கும்

யாழ்ப்பாணம், அக். 10 யாழ். பல்கலைக்கழகத்தின் சகல பீடங்களும் நவம்பர் 5 ஆம் திகதி முதல் இயங்க ஆரம்பிக்கும்.

நேற்றுக் காலை யாழ்-பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் இது சம்பந்தமான முடிவு எடுக்கப்பட்டது.

பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் அ. துரைராஜா தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்தில் பல்கலைக்கழக பீடங்களின் தலைவர்கள், பல்கலைக்கழக பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், திணைக்களத் தலைவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின் படி சகல மாணவர்களும் நவம்பர் 5 முதல் விரிவுரைகளுக்கு சமுகமளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர். புதிதாக அனுமதிக்கப்பட்ட மாணவர்களுக்கும் (கல்வியாண்டு 89/90) இத்திகதியிலேயே விரிவுரைகள் ஆரம்பமாகும்.

சமீபத்திய இராணுவ நடவடிக்கைகளால் தமது சொந்த இடங்களுக்குச் சென்றுள்ள வெளி மாவட்ட மாணவர்களின் நன்மை கருதியே ஒரு மாத கால தவணை வழங்கப்பட்டுள்ளதாக பல்கலைக்கழக வட்டாரங்கள் தெரிவித்தன.

இங்கிருந்து சென்று தென்பகுதி பல்கலைக்கழகங்களில் சேர்ந்துள்ள மாணவர்களையும் திரும்பி ஏற்றுக் கொள்வதற்கு யாழ். பல்கலைக்கழகம் தயாராக இருப்பதாகவும் -

ஆனால் அந்த மாணவர்கள் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவிடமிருந்து கடிதம் பெற்று வர வேண்டும் என்றும்-

அதே வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தை விரைவில் ஆரம்பிக்காது விட்டிருந்தால், மாணவர்கள் எண்ணிக்கை குறையும் பட்சத்தில், பல்கலைக்கழகமே மூடப்படும் சூழ்நிலை உருவாகி இருந்தது

மின்சார வசதி, நீர்விநியோகம் ஆகியவை அற்ற நிலையிலும், மற்றும் பல்வேறு சிரமங்களின் மத்தியிலும் பல்கலைக்கழகத்தை மீண்டும் ஆரம்பிக்க தற்போது முடிவாகி இருக்கிறது [இ-6]

# இந்த வாகனங்களுக்கு விசேட அனுமதிப்பத்திரம்

யாழ்ப்பாணம், அக். 10 பொதி சுமக்கும் அனைத்து வாகனங்களும் (லொறி, டிராக்டர், எல்ப் போன்றவை உட்பட) வடபிராந்திய பொதி சுமக்கும் வாகன சேவைச் சங்கத்தினால் வழங்கப்படும் வரிப்பற்றுச் சீட்டுடன் அனுமதிப்பத்திரம் பெற்றே வவுனியா மாவட்டத்துக்கு அப்பால் செல்லவேண்டும்.

சங்கத்தின் சார்பில் நேற்று வெளியிடப்பட்ட அறிவித்தல் ஒன்றில் இத்தகவல் தெரிவிக்கப்பட்டிருக்கிறது

அனுமதிப் பத்திரமின்றி பொதி சுமக்கும் எந்த வாகனமும் வவுனியா மாவட்டத்துக்கு அப்பால் செல்ல அனுமதிக்கப்படமாட்டாது என்றும் தெரிவிக்கப்பட்டது. [உ]

## மீட்பு

யாழ்ப்பாணம், அக். 10 ஊர்காவற்றுறை தம்பாட்டிப் பகுதியில் ஸ்ரீலங்கா இராணுவத்தினரால் புதைக்கப்பட்ட மேலும் 104 மிதிவெடிகளை தமிழீழ விடுதலைப்புலிகள் கடந்த ஞாயிறு, திங்கட்கிழமைகளில் மீட்டதாகத் தெரிவிக்கப்பட்டது


## சேவ்ரி ரவல்ஸ்

வாடிக்கையாளருக்கு

எமது பஸ் சேவை இன்றுமுதல் ஆரம்பம்

தொடர்புகள்;

★ 118, சேகர் மோட்டேர்ஸ் ஸ்ரான்லி வீதி, மக்கள் வங்கி முன்பாக

★ கிளைக் காரியாலயம்- ப.நோ.கூ. சங்கம் முன்பாக, சங்கானை.

-சேவ்ரி ரவல்ஸ்.

(14413)



உங்கள் அபிமான

அழகுசாதன, விளையாட்டு, அன்பளிப்புப் பொருள்களின் ஸ்தாபனம்.

## அம்பிகாபதி பான்ஸி ரேடர்ஸ்

இப்பொழுது

யாழ். நாச்சிமார் கோவில் முன்பாக 628/2, கே. கே. எஸ் வீதியில் நடைபெற்று வருகிறது.

வாடிக்கையாளர்கள் தொடர்பு கொள்ளுங்கள்.

[14385]


## சேத மதிப்பீடு

கொட்டடிப் பகுதியில் ஏற்பட்ட சேதங்கள் மற்றும் பாதிப்புகள் குறித்து அப்பகுதிக் கிராம சேவகர் தலைமையிலான குழுவால் கடந்த திங்கட்கிழமை முதல் மதிப்பீட்டு- விவரம் சேகரிக்கும் வேலைகள் தொடங்கப்பட்டுள்ளன.

ஆனால் அப்பகுதியில் மக்கள் இன்னும் மீளக்குடியமரவில்லை. மக்கள் வீடுகளுக்கு வந்து மதிப்பீட்டுக் குழுவினருக்கு உதவி ஒத்துழைக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர். (அ)

## திருமலை அரச ஊழியர்

திருகோணமலையிலிருந்து இடம்பெயர்ந்து யாழ்ப்பாணத்தில் தங்கியுள்ள அரசாங்க ஊழியர்கள் வேலைக்குத் திரும்ப போக்குவரத்து ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

இந்த வசதியைப் பெற விரும்பும் ஊழியர்கள் நல்லூர் கமநல சேவை நிலையத்தில் இன்று காலை 8-30 மணிக்கு சமுகமளிக்கும்படி கேட்கப்பட்டுள்ளனர்.

28 ஊழியர்கள் செல்ல மட்டுமே ஒழுங்கு மேற்கொள்ளப்பட்டுள்ளதால், முன்னுரிமை அடிப்படையிலேயே இடம் வழங்கப்படும் எனவும், உரிய அனுமதிப் பத்திரம் உள்ளவர்கள் மட்டும் சமுகமளிக்குமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-3 6)

## ஆசிரியர்கள் இன்று புறப்பாடு

வடக்குக்குவெளியே கடமையாற்றும் ஆசிரியர்கள் இன்று மாலை 4 மணிக்கு முத்திரைச் சந்தியில் - நல்லூர் ஸ்தான பாடசாலையில இருந்து பஸ்களில் புறப்படத்தேவையான சகல ஏற்பாடுகளையும் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் செய்துள்ளது

பதிவு செய்யத் தவறியவர்கள் இன்று பகல் 12 மணிக்கு முன் நல்லூர் ஸ்தான பாடசாலையில் பதிவு செய்து கொள்ள முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-3)

## 12 ராணுவத்...

பின்னர் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் பிரதிநிதி தாம் சடலங்களைப் பெற்றுக்கொண்டதை உறுதிப்படுத்தும் பத்திரத்தில் ஒப்பமிட்டார்.

அதனை உறுதிப்படுத்தி யாழ். மாவட்ட அரசியல் பொறுப்பாளர் திரு. ஆஞ்சநேயரும் கையெழுத்திட்டார்.

பின்னர் சடலங்கள் அடங்கிய பேழைகள், இழுவைப் படகுகளில் ஏற்றப்பட்டு பருத்தித்துறை கடற்பரப்பில் நின்ற ''பிங்கோ றேட்ஸ்'' சப்பலுக்கு கொண்டு செல்லப்பட்டன.

நேற்றுக்காலை 11 மணியளவில் புறப்பட இருந்த கப்பல் பிரஸ்தாப பேழைகளை ஏற்றிச் செல்லும் பொருட்டு மாலை வரை தரித்து நின்றது குறிப்பிடத்தக்கது

சடலங்கள் அடங்கிய பேழைகளை ''பிங்கோ றேட்ஸ்'' கப்பல், கடலில் வைத்து இலங்கை கடற்படையினரிடம் ஒப்படைக்கும் எனச் சொல்லப்பட்டது

நேற்று நடைபெற்ற சடலங்கள் ஒப்படைப்பு வைபவத்தில் விடுதலைப் புலிகளின் யாழ் மாவட்ட அரசியல் பொறுப்பாளர் ஆஞ்சநேயர், வடமராட்சி இராணுவப் பொறுப்பாளர் சூசை, அரியாலைப் பொறுப்பாளர் பஷீன், நல்லூர் பொறுப்பாளர் மோகன் ஆகியோரும், செஞ்சிலுவைச் சங்க சார்பில் திரு. சுவர்ணராஜ், பருத்தித்துறை ப. நோ. கூ. ச. தலைவர் காந்திதாசன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

சடலம் ஒப்படைப்பதை பார்வையிட [illegible] துறைமுகத்திற்கு வந்திருந்தனர். [அ-9]

## சந்தை மீது ஹெலித்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி] ழந்தோர் விவரம்:-

● சின்னையா ஸ்கந்தராசா (வயது 40) - கச்சாய் வீதி.

● இ. ஸ்ரீரங்கன் (வயது 14) - மட்டுவில்.

● ஏ. கெங்கைவேந்தன் (வயது 29) - அல்லாரை (சாவகச்சேரி ஆஸ்பத்திரி ஊழியர்).

● பொன்னம்பலம் இலட்சுமணன் (வயது 12)- சங்கத்தானை.

● பஞ்சலிங்கம் (வயது 50) -பழைய வாய்க்கால், மிருசுவில்.

● செ. முத்துப்பிள்ளை (வயது 60) - மீசாலை.

● பாலசிங்கம் மகேஸ்வரி (வயது 51) - மீசாலை.

● ஆறுமுகம் பசுபதி (வயது 50) — மானிப்பாய்

● இராமகிருஷ்ணன் (வயது 27) — சங்கத்தானை. (காயமுற்ற இவர் மானிப்பாயில் இயங்கும் யாழ். போதனா ஆஸ்பத்திரியில் உயிரிழந்தார்)

இந்தச் சம்பவத்தில் காயமுற்றோர் விவரம்:-

★ இராசலிங்கம் (வயது 46) — மிருசுவில்.

★ இ. ஸ்ரீபாஸ்கரன் (வயது 26) — மட்டுவில் (இந்தச் சம்பவத்தில் மரணமடைந்த ஸ்ரீரங்கனின் சகோதரன்)

★ துரையப்பா (வயது 55) — சாவகச்சேரி.

★ திருமதி ஸ்கந்தராசா (வயது 36) — கச்சாய் வீதி (இந்தச் சம்பவத்தில் மரணமான ஸ்கந்தராசாவின் மனைவி)

★ எஸ். புஷ்பராணி (வயது 25) — சாவகச்சேரி.

★ எஸ். யோகம்மா (வயது 50) — மிருசுவில்.

★ சி. சரஸ்வதி (வயது 41) — மீசாலை.

★ ச. முத்துவேல் (வயது40)

★ நாகராசா (வயது 16) — சங்கத்தானை.

★ சுப்பிரமணியம் (வயது 14) — சங்கத்தானை.

★ கி. யோகராசா (வயது 27) — நெல்லியடி.

★ இராஜன் (வயது 29)

★ எம். கனகம்மா (வயது 40) — மீசாலை.

★ திருமதி சின்னமணி (வயது 40) — மந்துவில்.

★ கெங்காதரம் (வயது 29) — சாவகச்சேரி.

★ இராசகுமார் (வயது 23) — அச்சுவேலி.

★ இராகுலன் (வயது 23)— சாவகச்சேரி.

★ சுகுணன் (வயது 14) — சாவகச்சேரி.

★ நந்தகோபால் (வயது 26) — சாவகச்சேரி.

பலியானவர்களின் சடலங்கள் சாவகச்சேரி அரசினர் வைத்தியசாலையில் வைத்து உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டன. (உ-117)

## பிரதேசப் பொறுப்பாளர்களே--

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி] ரவையால் உறுதிப்படுத்தப்பட்ட கடிதத்தை சமர்ப்பித்தால் பிரதேசப் பொறுப்பாளர் அனுமதிப்பத்திரம் வழங்குவார்.

★ அரசாங்க ஊழியர்கள் தமது திணைக்கள அடையாள அட்டையைச் சமர்ப்பிக்கலாம்.

★ ஏனையோர் தமிழீழ மீட்புநிதி செலுத்தியதற்கான பற்றுச்சீட்டையும்சமர்பிக்க வேண்டும்.

(அரச, தனியார் ஊழியர்களில் கணவன்-மனைவி இருவரும் வேலை செய்தால் அவர்களும் மீட்பு நிதி பற்றுச் சீட்டை சமர்பிக்க வேண்டும்.]

★ கடும் சுகவீனமுற்றவர்களுக்கு தகுந்த வைத்திய அத்தாட்சிப் பத்திரம் சமர்பிக்கப்பட்டால் அனுமதிப்பத்திரம் வழங்கப்படும்.

★ இடம்பெயர்ந்த கிழக்கு மாகாண மக்கள் தமது சொந்த இடங்களுக்குத் திரும்புவதாக இருந்தால் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் அகதிகள் புனர்வாழ்வுப் பிரிவின் அல்லது சிற்றூரவையால் உறுதிப்படுத்தப்பட்ட கடிதத்தைச் சமர்ப்பித்து அனுமதிப்பத்திரத்தைப் பெறலாம்.

★ பயணிகள் தமது அனுமதிப்பத்திரத்தை வவுனியாவில் உள்ள புலிகளின் கண்காணிப்பு நிலையத்தில் ஒப்படைத்த பின்னரே தொடர்ந்து செல்ல அனுமதிக்கப்படுவர்.

இன்று முதல் யாழ் முத்திரைச் சந்தியிலும், நாளை முதல் சாவகச்சேரி, வடமராட்சி ஆகிய இடங்களிலும் இயங்கும் மினிபஸ் சங்க செயகத்தில் அனுமதிப் பத்திரத்தைக்காட்டி பயணத்துக்கான சீட்டுகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

★ வவுனியாவுக்குப் பயணிகளை ஏற்றிச் செல்லும் எந்த ஒரு வாகனமும் மேற்படி மூன்று நிலையங்களில் ஒன்றில் வாகன இலக்கம், பிரயாணிகள் எண்ணிக்கை ஆகியவற்றைப் பதிந்த பின்னரே தமது பயணத்தை ஆரம்பிக்கவேண்டும்.

— இவ்வாறு அவர் தெரிவித்தார். [உ]

## வல்வெட்டித்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி] 43,, எஸ். தர்மச்சந்திரன் வயது 40) என்று தெரிவிக்கப்பட்டது.

இத்தாக்குதலின் போது சந்தைப் பகுதியிலுள்ள பல கட்டடங்கள் அதிர்ந்தன. பலவீடுகள் சேதமடைந்தன.

## சுன்னாகத்தில்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி] வீடு ஒன்று சிறு சேதத்திற்குள்ளானது.

சுன்னாகம் சந்தைப் பகுதியிலும், நாகம்ஸ் தியேட்டர் அருகிலும் ஷெல்கள் விழுந்து வெடித்தன.

சுன்னாகம் கிழக்குப் பகுதியிலும் ஷெல் விழுந்து வெடித்தது. உயிர்ப்பலியோ பெரும் சேதங்களோ ஏற்படவில்லை. [ஒ-68-ரி]


## மரண அறிவித்தல்

### திருமதி நாகம்மா மயில் வாகனம்

வட்டு. கிழக்கு சித்தங்கேணியைச் சேர்ந்த திருமதி நாகம்மா மயிலவாகனம் 09-10-90 செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

இவர் காலம்சென்ற மலாயன் பென்சனர் திரு. சபாபதிப்பிள்ளை மயில்வாகனத்தின் அன்பு மனைவி ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் அவரது இல்லத்தில் 10-10-90 (புதன்கிழமை) இன்று காலை 9-00 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக வழுக்கையாறு மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:

வட்டுக்கோட்டை. [14414] க. கந்தையா


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி 298/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 10-10-1990 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org